## RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | I.A.No. 92 of 1996 in O.S.No. 81/1996 | **CNR No.** | : | TNKI13-000001-1972 |
| **Name** | : | சிவலிங்கம் | **Father's Name** | : | ராமசாமி |
| **Witness for** | : | மனுதாரர் | **Calling** | : | PW2 |
| **Age** | : | 55 | **Village** | : | திருப்பூர் |
| **Taluk** | : | திருப்பூர் | **District** | : | திருப்பூர் |
| **Start Time** | : | 4:00 PM | **End Time** | : | 04:30 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 26.03.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை**

நான் வழக்கிற்கு 3ம் தரப்பினர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சியாக முன்னிலையாகி நிரூபண பிராமாணபத்திரம் தாக்கல் செய்கிறேன். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணபத்திரத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும். அவை சரியாக இருந்ததால் நான் அனைத்து பக்கங்களிலும் கையொப்பம் செய்தேன். நான் இருந்த போது எழுதப்பட்டதாக சொல்லும் உயில் பத்திரத்தை என்னால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியும். நான் சொல்லும் உயில் பத்திரம் என்னிடம் காட்டப்படும் **ம.சா.ஆ.1** உயில் பத்திரமா என்றால் ஆமாம். அதில் எத்தனை நபர்கள் கைொயப்பம் செய்தார்கள் என்றால் நான்கு நபர்கள் கையொப்பம் செய்தார்கள். அவர்கள் யார் என்ற விவரம் தெரியுமா என்றால் ராமசந்திரம், மேகநாதன், ராமு மற்றும் நாகராஜ் ஆவார்கள். அவர்கள் நான்கு நபர்கள் தான் கையொப்பம் செய்தார்களா என்றால் ஆமாம்.

4 முதல் 6 எதிர்மனுதார்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

(1) உயில் எழுதியது எப்போது என்றால் காலை 9–10 மணி வரை இருக்கும். உயில் எழுதியது எந்த தேதி என்றால் மார்ச் மாதம் 1987 2 அல்லது 3 தேதி இருக்கும் என்று நினைக்கிறேன். சாமாத்தம்மாள் கையொப்பம் செய்தாரா அல்லது கைரேகை வைத்தாரா என்றால் கைரேகை வைத்தார். உயில் எழுதும் போது சாமாத்தம்மாளின் உடல் நிலை எவ்வாறு இருந்தது என்றால் நன்றாக தான் இருந்தார். உயிலை யார் எழுதினார் என்றால் பாய் ஒருவர் சாமாத்தம்மாள் சொல்ல சொல்ல எழுதினார். உயில் எழுதும் போது யார் யார் இருந்தார்கள் என்றால் 6–7 நபர்கள் இருந்தார்கள், அதாவது கையொப்பம் செய்த நான்கு நபர்கள் மற்றும் சிலர் உடன் இருந்தார்கள். உயிலில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நாகராஜ், ராமசந்திரன், மேகநாதன் மற்றும் ராமு ஆவார்கள்.

10 முதல் 12 எதிர்மனுதார்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

(2) நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இடம் பிரச்சனை என்பதால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். யார் யாருக்கு இடப் பிரச்சனை என்றால் ராம கவுண்டர் மற்றும் சக்திவேல் ஆகியோர்களுக்கு இடம் பிரச்சனை ஆகும். ராம கவுண்டரை எப்படி தெரியும் என்றால் அவரது கரும்பு தோட்டத்தில் வேலை செய்யும் போது தெரியும். எவ்வளவு வருடங்களாக வேலை செய்தேன் என்றால் 2–3 ஆண்டுகள் வேலை செய்தேன். எப்போது வேலை செய்தேன் என்றால் 1987 க்கு முன்பு மருந்து அடிக்க சென்றேன். வேலை செய்ததால் ராம கவுண்டர் பழக்கமா என்றால் ஆமாம். அவர் அழைத்து தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால்

ஆமாம். அந்த ஊரில் வேற யாரிடமாவது பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. இடம் பிரச்சனை சம்பந்தமாக மட்டும் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் ஆமாம், வேறு எதுவும் இல்லை என்றால் ஆமாம்.

**<u>10 முதல் 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai